ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_{3}$மாந்தமஹாதே$_{3}$ஶிகாய நம:

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 6.9 – நீராய் நிலனாய்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_{3}$ராமாநுஜ மஹாதே$_{3}$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 6.9 – நீராய் நிலனாய்

‡ நீர் ஆய் நிலனாய் ⋆
தீ ஆய்க் காலாய் நெடு வானாய் ⋆
சீர் ஆர் சுடர்கள் இரண்டாய்ச் ⋆
சிவன் ஆய் அயன் ஆனாய் ⋆
கூர் ஆர் ஆழி வெண் சங்கேந்திக் ⋆
கொடியேன் பால் வாராய் ⋆
ஒரு நாள் மண்ணும் விண்ணும் மகிழவே ‖ **6.9.1** ‖

மண்ணும் விண்ணும் மகிழக் ⋆
குறள் ஆய் வலம் காட்டி ⋆
மண்ணும் விண்ணும் கொண்ட ⋆
மாய அம்மானே ⋆
நண்ணி உனை நான் ⋆
கண்டுகந்து கூத்தாட ⋆
நண்ணி ஒரு நாள் ⋆
ஞாலத்தூடே நடவாயே ‖ **6.9.2** ‖

ஞாலத்தூடே நடந்தும் நின்றும் ⋆
கிடந்திருந்தும் ⋆
சாலப் பல நாள் ⋆
உகந்தோறுயிர்கள் காப்பானே ⋆
கோலத் திருமா மகளோடு ⋆
உன்னைக் கூடாதே ⋆

சாலப் பல நாள் ⋆
அடியேன் இன்னும் தளர்வேனோ ॥ **6.9.3** ॥

தளர்ந்தும் முறிந்தும் ⋆
சகட அசுரர் உடல் வேறா ⋆
பிளந்து வீயத் ⋆
திருக் கால் ஆண்ட பெருமானே ⋆
கிளர்ந்து பிரமன் சிவன் ⋆
இந்திரன் விண்ணவர் சூழ ⋆
விளங்க ஒரு நாள் ⋆
காண வாராய் விண் மீதே ॥ **6.9.4** ॥

விண் மீதிருப்பாய் ! மலை மேல் நிற்பாய் ! ⋆
கடல் சேர்ப்பாய் ⋆
மண் மீதுழல்வாய் ! ⋆
இவற்றுள் எங்கும் மறைந்துறைவாய் ⋆
எண் மீதியன்ற புற அண்டத்தாய் ! ⋆
எனதாவி ⋆
உள் மீதாடி ⋆
உருக்காட்டாதே ஒளிப்பாயோ ॥ **6.9.5** ॥

பாயோர் அடி வைத்து ⋆
அதன் கீழ்ப் பரவை நிலம் எல்லாம் தாய் ⋆
ஓர் அடியால் ⋆
எல்லா உலகும் தடவந்த மாயோன் ⋆
உன்னைக் காண்பான் ⋆
வருந்தி எனை நாளும் ⋆

தீயோடு உடன் சேர் மெழுகாய் ⋆
உலகில் திரிவேனோ ॥ **6.9.6** ॥

உலகில் திரியும் கரும கதி ஆய் ⋆
உலகம் ஆய் ⋆
உலகுக்கே ஓர் உயிரும் ஆனாய் ⋆
புற அண்டத்து ⋆
அலகில் பொலிந்த ⋆
திசை பத்தாய அருவேயோ ⋆
அலகில் பொலிந்த ⋆
அறிவிலேனுக்கருளாயே ॥ **6.9.7** ॥

அறிவிலேனுக்கருளாய் ⋆
அறிவார் உயிர் ஆனாய் ⋆
வெறி கொள் சோதி மூர்த்தி ! ⋆
அடியேன் நெடுமாலே ⋆
கிறி செய்தென்னைப் புறத்திட்டு ⋆
இன்னம் கெடுப்பாயோ ⋆
பிறிதொன்றறியா அடியேன் ⋆
ஆவி திகைக்கவே ॥ **6.9.8** ॥

ஆவி திகைக்க ⋆
ஐவர் குமைக்கும் சிற்றின்பம் ⋆
பாவியேனைப் ⋆
பல நீ காட்டிப் படுப்பாயோ ⋆
தாவி வையம் கொண்ட ⋆
தடம் தாமரைகட்கே ⋆

கூவிக் கொள்ளும் காலம் ⋆
இன்னம் குறுகாதோ ॥ **6.9.9** ॥

குறுகா நீளா ⋆
இறுதி கூடா எனை ஊழி ⋆
சிறுகா பெருகா ⋆
அளவில் இன்பம் சேர்ந்தாலும் ⋆
மறு கால் இன்றி மாயோன் ⋆
உனக்கே ஆளாகும் ⋆
சிறு காலத்தை உறுமோ ⋆
அந்தோ தெரியிலே ॥ **6.9.10** ॥

‡ தெரிதல் நினைதல் ⋆
எண்ணல் ஆகாத் திருமாலுக்கு ⋆
உரிய தொண்டர் தொண்டர் ⋆
தொண்டன் சடகோபன் ⋆
தெரியச் சொன்ன ⋆
ஓர் ஆயிரத்துள் இப்பத்தும் ⋆
உரிய தொண்டர் ஆக்கும் ⋆
உலகம் உண்டாற்கே ॥ **6.9.11** ॥

அடிவரவு — நீராய் மண்ணும் ஞாலத்தூடே தளர்ந்தும் விண்மீது பாயோரடி உலகில் அறிவிலேனுக்கு ஆவி குறுகா தெரிதல் உலகம்

நீராய் நிலனாய் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்